**அரசகரும மொழிகள் ஆணைக்குழு - 2024**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைணக்குழுவினை கலைப்பதற்கு

கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பந்தி 76 இன் பிரகாரம் ரூபா 6,239,488 தொகைக்கான பணிக்கொடை ஒதுக்கத்திற்குரிய பின்னைய சேவை நலன்களின் பொறுப்பு மற்றும் தொடர்புடைய மேம்பாட்டுச் சேவைக் கிரயத்தின் தற்போதைய பெறுமதியை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கங்கள் தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் தொடர்புடைய மேம்பாட்டுச் சேவைக் கிரயத்தின் தற்போதைய பெறுமதி கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த கணினிகளின் கிரயம் திரண்ட பெறுமானத் தேய்வுப் மதிப்பீடுகளுக்கான ஆரம்ப மீதிகள் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கணினிகளின் முழுமையான கிரயத்தை மிகைத்து திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி காட்டப்பட்டிருந்தமையால், கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வுப் பெறுமதி உரிய பெறுமதிகள் இரண்டும் அகற்றப்பட்டமையால் நிதிசார் தாக்கமொன்று ஏற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக அவ்வாறு குறிப்பிட்ட இரண்டு பெறுமதிகளும் அகற்றப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் கிரயம் மற்றும் திரண்ட மீதியின் ஆரம்ப மீதிகளின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2024 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு கணக்குகளில் இருந்து அகற்றப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு அந்தச் சொத்துக்களின் தேறிய பெறுமதி முறையே ரூபா 50,761 தொகை மிகையாகவும் மற்றும் ரூபா 198,061 தொகை குறைவாகவும் நிதி | இந்தப் பண்டங்களுக்குரிய கிரயத்தை இனங்காண முடியாமையால் பெறுமதியினை சீராக்கல் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. 2025 ஆண்டில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்குகளில் சரியாக சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஆண்டின் போது நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றிருந்த ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,035,590 தொகை பெறுமதியான பணிக்கொடை கொடுப்பனவு, பணிக்கொடை ஒதுக்கக் கணக்கு போலவே நிதிச் செயலாற்றல் கூற்றிலும் ஊழியர் சம்பளம் மற்றும் வேதனங்களின் கீழ் பணிக்கொடை கொடுப்பனவு என வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை சமமான எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ஊழியர் சம்பளங்கள் மற்றும் வேதனங்களின் கீழ் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், ஊழியர் பணிக்கொடை சீராக்கல்களின் கீழ் அதனை கழித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, திசெம்பர் 31 திகதி ஒதுக்கம் தொடர்பாக இந்தத் தொகை கழிக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2024 ஆண்டிற்குரிய 04 செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,494,576 தொகை 2025 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தச் செலவுகள் 2024 ஆண்டின் செலவுகள் என இனங்கண்டிருக்காமையால் சமமான எண்ணிக்கையினால் ஆண்டிற்கான பற்றாக்குறை குறைவாகவும் மற்றும் பொறுப்புக்கள் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | குறைபாடொன்றென ஏற்றுக்கொள்கின்றேன். | செலவுகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டமொன்றிலிருந்து உரித்தாக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கள் ஒன்றினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அது கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தாக்கப்பட்ட சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2024 ஜனவரி 10 திகதிய 01/2024 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 11.3 | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகளின் மீதித் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 2,987,887 தொகை, ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் திறைச்சேரியின் செயற்பாட்டுத் | இது தொடர்பாக திறைச்சேரியிடம் வினவப்பட்டது. அது தொடர்பாக கிடைக்கும் பதிலின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி வருட இறுதியில் கையிருப்புக் காசு திறைச்சேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,852,620 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,218,396 தொகை ஆகும். அதன்படி, நிதி விளைவில் ரூபா 634,224 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு, சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைச் செலவுகள் ரூபா 687,383 தொகையினால் அதிகரித்தலுக்கு தொடர்புடைய திறைச்சேரி ஏற்பாடுகள் ரூபா 2,473,500 தொகை குறைவாக கிடைத்திருத்தல் அடிப்படைக் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு ரூபா 614,800 தொகை செலவிடப்பட்டு ஆணைக்குழுவிற்காக தயாரிக்கப்பட்ட இணையத்தளம் 2025 ஒக்தோபர் 24 திகதியளவில் செயற்படு நிலையில் காணப்படவில்லை. | 2018 ஆண்டு தயாரிக்கப்பட்டிருந்த இணையதளம் 2024 ஆண்டு வரை செயற்பட்டது. இணையதளத்தை பராமரிப்பதற்காக நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆணைக்குழுவில் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையால் இணையதள விடயங்களை செயற்திறனாக நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் உள்ளது. | தயாரிக்கப்பட்ட இணையதளத்தை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 42 ஆக காணப்பட்டதுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 14 ஆகும். அத் திகதியில் உள்ளவாறு 28 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 02 பதவியணிகள் | மோழிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் மொழிகள் மேம்பாட்டு மற்றும் விசாரணை உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது. சாரதி வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோறப்படவுள்ளது. ஏனைய பதவிகளுக்காக 2026 | பதவியணி தேவைப்பாட்டினை கால ரீதியாக மீளாய்வு செய்து தேவையான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெற்றிடமாக காணப்பட்டது. | ஆண்டில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம அறிமுகப்படுத்தியிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் பிரிவு 6.6 இன் படி வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காக சமர்பபிக்கப்பட வேண்டிய போதிலும், 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 208 நாட்கள் தாமதத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவில் கணக்காளர் பதவியொன்று காணப்படாமையால், பதில் கடமை கணக்காளரினால் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. இந்த தாமத்தினை எதிர் காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, 60 அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களில் மொழிகள் கணக்காய்வை கண்காணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 31 எண்ணிக்கை மாத்திரம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>மொழிகளின் உரிமைகள் அரச மொழிகள் கொள்கையை மீறல் ஆகியவை தொடர்பாக கிடைக்கக்கூடிய அனைத்து முறைப்படுகளையும் விசாரணை செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது கிடைத்திருந்த 83 முறைப்பாடுகளில் 22 மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டுகளுக்குரிய மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 65 ஆகும். | மொழிகள் மேம்பாட்டு மற்றும் விசாரணை உத்தியோகத்தர் மூவர் அடங்கிய குறைந்த மனிதவளத்தினூடான இந்த 52 சதவீத முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆணைக்குழு 2024.10.01 திகதி விலகிய பின்னர் மொழிக் கணக்காய்வு இடைநிறுத்துவதற்கு நேரிட்டிருந்தது. இந்த ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த மொத்த முறைப்பாடுகள் 87 ஆகும். மேலும், முறைப்பாடு விசாரணை கால வரையறையின் படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளில் ஒதுக்கமொன்றும் காணப்படுகின்றது. | நடைமுறைச் சாத்திய நிலைமையை கவனத்தில் எடுத்து திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திட்டத்தில் காணப்படுகின்ற எதிர்பார்த்த கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |